

சென்னை, சர்தார்பட்டேல் சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில், சர்தார்பட்டேல் சாலையையும் – இராஜீவ்காந்தி சாலையையும் இணைக்கும் வகையில், மத்தியகைலாஷ் சந்திப்பில் அமைக்கப்பட்டுவரும் “L” வடிவமேம்பால பணிகளை, நேற்று (23.7.2025) அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்புஅலகு) கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், சென்னை பெருநகர கண்காணிப்புப் பொறியாளர் ச.ஜவஹர்முத்துராஜ், சென்னை கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம், கோட்டபொறியாளர் பி.சந்திரசேகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சானடோரியம் பகுதியில் ரூ.145.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் 3 மருத்துவ கட்டிடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, மண்டலக் குழுத் தலைவர்கள் தூ.காமராஜ், சு.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மத்திய கைலாஷ் சந்திப்பில் நடைபெற்று வரும்

# மேம்பாலப் பணிகளை அக். 31-க்குள் முடிக்க வேண்டும்!

## பணிகளை ஆய்வு செய்த பின் - அமைச்சர் எ.வ.வேலு அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, ஜூலை 24-

சென்னை, சர்தார் பட்டேல் சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில், சர்தார் பட்டேல் சாலையையும் இராஜீவ் காந்தி சாலையையும் இணைக்கும் வகையில், மத்திய கைலாஷ் சந்திப்பில் அமைக்கப்பட்டு வரும் “L” வடிவ மேம்பால பணிகளை, நேற்று (23.7.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில், மேம்பாலப் பணிகளை விரைவுபடுத்தி, 2025 அக்டோபர் 31-ஆம் தேதிக்குள் முடிக்கும்படி, அமைச்சர் உத்தரவிட்டார்.

மேலும், சர்தார் பட்டேல் சாலையில், காந்தி மண்டபம் சாலை முதல் ஜி.எஸ்.டி. சாலை வரை, IIT, அண்ணா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் போன்ற முக்கிய கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் இருப்பதால், அந்தப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில், தற்போதைய நான்கு வழித்தட சாலையை, ஆறு வழித்தடமாக விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யும்படி அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு) கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் திரு.இரா. சந்திரசேகர், சென்னை பெருநகர கண்காணிப்புப் பொறியாளர் ச.ஜவஹர் முத்துராஜ், சென்னை கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம், கோட்ட பொறியாளர் பி. சந்திரசேகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கோத்தகிரி வட்டம் - தேனாடு ஊராட்சியில் நடந்த

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் - 545 பழங்குடியினர் பங்கேற்பு!

## தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆய்வு!

நீலகிரி, ஜூலை 24 -

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட சோலூர் மட்டம் ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் அரக்காடு ஊராட்சி சுற்றுவட்டார பகுதியில் இருந்து கிராமங்கள் உள்ளடக்கிய பழங்குடியினர் மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் சோலூர் மட்டம் தேனாடு ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் அரக்கோடு சுற்றியுள்ள பகுதியில் இருந்து 1065 மக்கள் தொகை கொண்ட கிராமப்புறங்களில் இருந்து மதியம் 1 மணிக்குள் 545க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வருகை தந்து அவர்களின் கோரிக்கைகளை பதிவு செய்தனர்.

இம்முகாமினை அரசு தலைமை கொறடாவு கா. ராமச்சந்தி ரன் ஆய்வு மேற்கண்ட போது அவரிடம் அப்பகுதி பழங்குடிமக்கள் இதற்கு முன் இவ்வாறன நிகழ்வுகள் தங்கள் பகுதியில் நடைபெறவில்லை எனவும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் அனைத்து துறைகளும் ஒரே இடத்தில் பங்கு பெற்றதால் தங்களது அனைத்து வகையான குறைகளை (ஆதார் கார்டு திருத்தம்,ஜாதி சான்றிதழ்,மகளிர் உரிமைத் தொகை,மின் இணைப்பு பெயர் மாற்றம், இலவச வீட்டு மனை பட்டா போன்ற ஒன்று தேவைகளை) தீர்த்து வைக்க இந்த முகாம் ஏதுவாக அமைந்ததில் பெரு மகிழ்ச்சி அடைந்ததாக தெரிவித்தனர் .

இந்நிகழ்வில் அதிகாரிகள், மற்றும் கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சர் விரைந்து முழு நலத்தோடு வர விழைவு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

சென்னை, ஜூலை 24-

‘‘முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விரைந்து தனது நிறைவான முழு நலத்தோடு வர விழைகிறேன்’’ என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

உழைப்பின் உருவமான நமது முதலமைச்சர் அவர்கள் நாளும் நலமடைந்து வருகின்ற நல்ல செய்தி - உலகெங்கும் உள்ள கொள்கையாளர்களுக்கும் அவரது கருணையும் கடமையும் போட்டி போட்டுக் கொண்டு ஆற்றும் தொண்டின் காரணமாகப் பயன் பெறும் பொது மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

அவர் முழு சிகிச்சை பெற்று தனது வழக்கமான கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பி வாழ்த்தும் அனைவருடன், என்றும் அவரது நலம் விரும்பியாக உள்ள நாமும் இணைகிறோம் - விழைகிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### பள்ளிப்பாளையத்தில் சிறுநீரக விற்பனை பிரச்சினை!

# மருத்துவமனைகளின் உரிமம் நிறுத்தி வைப்பு!

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை!

சென்னை, ஜூலை 24-

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் சிறுநீரகம் விற்றதாக வந்த செய்தியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முதற்கட்ட விசாரணை அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை செய்திகளில் வரப்பெற்ற முறைகேடான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை குறித்து விசாரித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.எஸ். வினீத், அவர்களை நியமித்து 18.07.2025 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.எஸ்.வினீத், மரு.இரா. ம. மீனாட்சிசுந்தரி, இணை இயக்குநர் (சட்டம்), மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை, மரு.ஏ.ராஜ்மோகன், இணை இயக்குநர் நலப்பணிகள் நாமக்கல், மரு.கே. மாரிமுத்து, இணை இயக்குநர் நலப்பணிகள் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டம், சீத்தாராமன், காவல் துணை கண்காணிப்பாளர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை ஆகியோர் அடங்கிய குழு தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரிவான விசாரணை மேற்கொண்டனர்.

இவ்விசாரணையின் அடிப்படையில் முதற்கட்ட விசாரணை அறிக்கையினை மரு.எஸ்.வினீத், அரசுக்கு அனுப்பியுள்ளார். அந்த முதற்கட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி ஆகிய மருத்துவமனைகளுக்கு மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994 பிரிவு 16 உட்பிரிவு (2) ன்படி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள வழங்கப்பட்ட உரிமம் பொதுமக்கள் நலன் கருதி தற்காலிகமாக நிறுத்தி வைக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


